***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.

**OS.No. 17/2017**

P.W.1 திரு.பக்ரூதீன் த/பெ.அப்துல் ரகுமான் நாள் – 23.01.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் 6ம் வகுப்பு படித்திருக்கிறேன். என்னுடைய பிறந்த தேதி 03.05.1965 ஆகும். எனது தகப்பனார் அப்துல் ரகுமான் ராவுத்தர் பர்மா நாட்டிற்கு சென்றிருந்தாரா என்றால் அங்கு தான் இருந்தார். எனது தகப்பனாருக்கு முகமது பீவி முதல் மனைவி என்றால் சரிதான் . மேற்படி முகமது பீவி எனது தகப்பனாருடன் பர்மா நாட்டிற்கு செல்லாமல் இந்தியாவில் தான் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது , நான் அப்போது பிறக்கவே இல்லை . மேற்படி முகமது பீவி எந்த நாட்டில் , எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முகமது பீவி இறந்தபோதும் கூட எனது தகப்பனார் பர்மா நாட்டில் இருந்ததால் இறுதிசடங்கில் கூட கலந்து கொள்ளவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . அப்துல் ரகுமான் ராவுத்தர், முகமது பீவி தம்பதிகளுக்கு சவுரா பீவி, 1ம் பிரதிவாதி ஷேக் முகைதீன், 1ம் வாதியின் தகப்பனார் அகமது ஆகிய மூவரும் பிள்ளைகள் என்றால் சரிதான் . எனது தாயார் ஜெய்னா பீவி என்பவருக்கு முதலில் யாருடன் திருமணம் நடந்தது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . எனது தாயார் ஜெய்னாபீவிக்கு முதல் கணவர் மூலமாக இரண்டு மகன்கள் உள்ளனர் என்று தெரியும். எனது தாயாரை பர்மாவில் இருக்கும்போதே அப்துல் ரகுமான் ராவுத்தர் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான் . எனது தாயார் ஜெய்னாபீவிக்கும், அப்துல் ரகுமான் ராவுத்தருக்கும் , நான், 3, 4ம் வாதிகள் மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான் . பர்மாவில் இந்தியர்களை அவர்களது சொந்த நாட்டிற்கு திரும்பி செல்ல

வேண்டுமென்றபோது தான் எனது தகப்பனார் இந்தியாவிற்கு வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . எனது தகப்பனார் பர்மா நாட்டில் இருந்து எந்தவருடம் இந்தியாவிற்கு வந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது . எனது தகப்பனார் பர்மா நாட்டில் இருந்து இந்தியர்கள் அவர்களது சொந்த நாட்டிற்கு வரும்போது அங்கிருந்த சொத்துக்களை விற்றுவிட்ட விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . 1ம் பிரதிவாதிக்கு எந்த வருடம் திருமணமானது என்று தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . 1ம் பிரதிவாதியையும், அவரது சகோதரர் அகமதுவும் அவர்களது தகப்பனாருடன் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும் , ஆனால் அவர்கள் பிரியவில்லை. 1ம் பிரதிவாதி எந்த வருடத்தில் இருந்து அவரது மாமனார் வீட்டில் குடியிருந்தார் என்றால் இல்லை, எங்கள் வீட்டில் தான் குடியிருந்தார். வழக்கு 1வது அயிட்ட சொத்தில் உள்ள வீட்டில் தான் 1ம் பிரதிவாதி குடியிருந்தாரா என்றால் ஆமாம் . நான் சொல்வது தவறு , அவருக்கு திருமனமான சிறிது நாட்கள் கழித்து 1ம் பிரதிவாதிக்கும் , அவரது தகப்பனாருக்கும் பிரச்சனை ஏற்பட்டு வழக்கு 1வது அயிட்ட சொத்தில் இருந்து பிரிந்து அவரது மாமனார் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் இல்லை, அது தவறு. எனக்கு உலக விவரம் எத்தனை வயதில் தெரிய வந்தது என்றால் 10 வயதில் இருந்து தெரியும் . 1ம் வாதியின் தகப்பனார் அகமது என்ன படித்துள்ளார் , எந்தெந்த கல்லூரியில் படித்தார் என்று தெரியுமா என்றால் B.E., காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படித்துள்ளார். B.E., படிப்பதற்கு முன்பு என்ன படித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . அவரது படிப்பு செலவிற்கு யார் பணம் கட்டினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும் , எனது தகப்பனார் கட்டினார். எனது தகப்பனார் 1ம் வாதியின் தகப்பனாரின் படிப்பு செலவிற்கு எந்த பணமும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல . 1ம் பிரதிவாதி Ex-service man bus company ல் வேலை பார்த்து வந்தார் என்றால் இல்லை . 1ம் பிரதிவாதி ரங்கூன் ஸ்டோர் என்று கீரனூரில் கடை ஆரம்பித்து நடத்தி வந்தார் என்றால் இல்லை .

பர்மாவில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் என்பதற்காக வழங்கப்பட்ட கடனை பெற்று 1ம் பிரதிவாதி கீரனூரில் ரங்கூன் ஸ்டோர் பெயரில் கடை நடத்தி வந்தார் என்றும், நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 1968ல் New Fancy Store என்ற பெயரில் ஜவுளி கடை ஆரம்பித்தார் என்றால் இல்லை . 1ம் பிரதிவாதி 1977ம் ஆண்டி Highway Department ல் முதல்நிலை ஒப்பந்தக்காரராக பதிவு செய்யப்பட்டு , பணி செய்து வந்தார் என்றால் இல்லை . 1974ம் ஆண்டு பெரோஷ் ரைஸ்மில் என்ற பெயரில் 1ம் பிரதிவாதி ஆரம்பித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . மேற்படி ரைஸ்மில் கட்டுவதற்கான அனுமதி , மின் இணைப்பு ஆகியவை 1ம் பிரதிவாதி பெயரில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. 1974ம் ஆண்டில் சென்னையில் கிரசன்ட் மெடிக்கல் ஷாப் என்ற பெயரில் பங்குதாரர்களுடன் 1ம் பிரதிவாதியின் மனைவியும் சேர்ந்து ஆரம்பித்தார் என்றால் இல்லை . மேற்படி கிரசன்ட் மெடிக்கல் ஷாப் 1ம் பிரதிவாதியின் மனைவி ரசியா பேகம், 1ம் வாதியின் தாயார் நஜ்மா பேகம் மற்றும் முகமது ஷரீப் ஆகிய மூவரும் பங்குதாரர்களாக மேற்படி மெடிக்கல் ஷாப் நடத்தப்பட்டது என்றால் சரிதான் . 1978ம் ஆண்டு 1ம் பிரதிவாதி சுயமாக கிரசன்ட் flough works என்ற பெயரில் கம்பெனி ஆரம்பித்து நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது.

**இக்கட்டத்தில் 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Additional District Judge,*
*Pudukkottai.*